முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, காணை ஊராட்சி ஒன்றியம், கக்கனூர் ஊராட்சியில் மக்கள் தொடர்பு திட்ட முகாமில் 252 பயனாளிகளுக்கு ரூ.50,65,491 மதிப்பிட்டில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மாவட்ட ஆட்சியர் டாக்டர் சி.பழனி, விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் ஏ.சிவா, ஒன்றிய குழு தலைவர் கலைச்செல்வி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

டிச. -24 சேலம் இளைஞர் அணி மாநாட்டில்

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தினர் 500 வாகனங்களில் சென்று பங்கேற்பு!

மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்! க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, டிச.18-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் காஞ்சிபுரம், கலைஞர் பவள விழா மாளிகையில், மாவட்ட கழக அவை தலைவர் ச.இனியரசு தலைமையில் நடைபெற்றது.

தொடக்கத்தில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர், எம்.எல்.ஏ., அனைவரையும் வரவேற்று பேசினார்.

மாவட்ட துணைச் செயலாளர் க.செல்வம் எம்.பி, டி.வி.கோகுலகண்ணன், திருமதி.கு.மலர்விழி, மாவட்ட பொருளாளர் சன்பிராண்ட் கே. ஆறுமுகம், காஞ்சிபுரம் கழக மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ. தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இரா.நாகன், டி.ஆர்.நாராயணன், எம்.எஸ்.சுகுமார், காஞ்சிபுரம் மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்செல்வன், பொதுக்குழு உறுப்பினர்கள். வெளிக்காடு ஏழுமலை, எஸ்.டி.பிரேம்சந்த், பொன்.சசிக்குமார், எஸ்.உசேன், எஸ்.சிகாமணி, எஸ்.எழிலரசி, மதுராந்தகம் நகர செயலாளர். கே.குமார், வாலாஜாபாத் ஒன்றியக் குழு பெருந்தலைவர் ஆர்.கே.தேவேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் கெ.ஞானசேகரன், பி.எம்.குமார், க.குமணன், டி.குமார், பி.சேகர், பொன்.சிவகுமார், சத்தியசாய், கே.கண்ணன், ஜி.தம்பு, எஸ்.ஏழுமலை, இ.சரவணன், பி.எம்.பாபு, சிற்றரசு எம்.எஸ்.பாபு. காஞ்சிபுரம் மாநகர பகுதி செயலாளர்கள். எஸ்.சந்துரு, கே.திலகர், அ.தசரதன், சு.வெங்கடேசன், காஞ்சிபுரம் நகர நிர்வாகிகள் கே.ஏ. செங்குட்டு வன், எ.எஸ்.முத்துசெல்வம், வ.ஜெகநாதன், நிர்மலா, கு.சுப்புராயன், பேரூர் செயலாளர்கள். என்.எஸ்.பாரிவள்ளல், என்.பாண்டியன், சுந்தரமூர்த்தி, மோகன்தாஸ், வி.எழிலரசன், பேரூராட்சி மன்ற தலைவர் செல்வி. சம்யூக்த அய்யனார், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அ.யுவராஜ், ஆ.செல்வி, நாத்திகம் நாராஜன், ஆ.சசிக்குமார், எஸ்.மாலதி, ஏ.நூருல்அமீன், நாகராஜன், வ.மலர்மண்ணன், வ.வெங்கட்ரா மன், டி.ஜெய்கணேஷ், சுந்தரவரதன், கே.ஏ. இளங்கோவன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பெமணி, க.பால்ராஜ், டி.சஞ்சய் காந்தி, ஆண்டோ சிலின்ராஜ், யுவராஜ் மற்றும் பலர் கலந்துகொண்டனர். முடிவில் மாவட்ட கழக செயலாளர். க.சுந்தர், எம்.எல்.ஏ., தீர்மானங்களை விளக்கி பேசினார்.

வரும் டிசம்பர் 19 இன மானப் பேராசிரியரின் 102-வது பிறந்தநாளில் அவருடைய திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து கழக கொடி யேற்றி இனிப்பு வழங்கி கொண்டாடிட தீர்மானிக்கப் பட்டது.

கடந்த டிசம்பர் 3, 4 தேதிகளில் மிக்ஜாம் புயலினால் ஏற்பட்ட கனமழை காரணமாக சென்னை. செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் வரலாறு காணாத வகையில் பெருவெள்ளம் ஏற்பட்டதோடு அனைத்து இடங்களிலும் நீர் புகுந்து மக்கள் வேதனைப்பட நேரத்தில் நம் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களும், அவருடைய ஆணையை ஏற்று அமைச்சர் உதயநிதி உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களும் மக்கள் பிரதிநிதிகளும் களத்தில் இறங்கி வெள்ள நிவாரண பணிகளிலும் துயர் துடைப்பு, பணிகளிலும் தங்களை ஈடுபடுத்தி மக்களுக்கு ஆறுதலாக செயல் பட்டார்கள்.

முதல்வர் அவர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாக வெள்ளம் வடிந்த நேரத்தில் பெரும் சேதங்களை தவிர்த்ததோடு, அதிக உயிரிழப்புக்கள் ஏற்படாமலும் காத்துள்ளார் என்பதை ஒன்றிய அரசின் குழுவே பாராட்டியது, அரசின் திறமையான செல்பாட்டை வெளிப்படுத்துகிறது.

அதோடு மட்டுமல்லாமல், உடனடியாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 6000 ரூபாய் வெள்ள நிவாரணம் வழங்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் வழங்கி உள்ளார். களத்தில் உழைத்த தூய்மை பணியாளர்களும் மின்வாரிய தொழிலாளர்கள் உள்ளிட்ட அமைவருக்கும் துயரத்தில் துணை நின்ற அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

சேலத்தில் வரும் டிசம்பர் 24 அன்று நடைபெறவுள்ள இளைஞர் அணியில் இரண்டாவது மாநில மாநாடு மாநில உரிமை மீட்பு மாநாடாக நடைபெற உள்ளது. அந்த மாநாட்டில் இளைஞர் அணி செயலாளரின் மாநில உரிமை முழக்கம் வெற்றி பெறவும் மாநாடு சிறக்கவும் நம் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் இருந்து 500 வாகனங்களில் பெருந்திரளாக இளைஞர்கள் பங்கேற்று சிறப்பிப்போம் என்று தீர்மானிக்கப்படுகிறது.

நீலகிரி மாவட்டம், குன்னூர் மேட்டுப்பாளையம் சாலை நந்தகோபால் பாலம் அருகில், மழையால் மண்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் சீரமைப்பு மேற்கொண்ட புகைப்படத் தொகுப்புகளை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (17.12.2023) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தேசிய நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் (சென்னை) திருமதி.கீதா, தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) சந்திரசேகர் (சென்னை), தலைமைப் பொறியாளர் (நபார்டு மற்றும் கிராம சாலைகள்) முருகேசன் (சென்னை) உட்பட பலர் உள்ளனர்.

நீலகிரி மாவட்டம், குன்னூர் மேட்டுப்பாளையம் சாலையில்

மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஆய்வு!

அமைச்சர் எ.வ.வேலு மேற்கொண்டார்!

உதகை, டிச. 18-

நீலகிரி மாவட்டம், குன்னூர் மேட்டுப்பாளையம் சாலையில் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (17.12.2023) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

முதலாவதாக, குன்னூர் மேட்டுபாளையம் சாலையில் நந்தகோபால் பாலம் அருகில், மழையால் மண்சரிவு ஏற்பட்ட் பகுதியினையும், கடந்த 30.09.2023 அன்று வாகன விபத்து ஏற்பட்ட பகுதியினையும், மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் மேட்டுப்பாளையம் சாலை கடந்த 23.11.2023 அன்று பெய்த கனமழையால் 17 இடங்களில் மண்சரிவு ஏற்பட்டு போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அதில் 3 இடங்களில் பாறைகளும் சாலையின் குறுக்கே விழுந்தது. முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நெடுஞ்சாலைத்துறையினரின் துரித மீட்பு நடவடிக்கையால் ஏறக்குறைய 3 மணி நேரங்களில் பாதிப்புகள் சீரமைக்கப்பட்டு, போக்குவரத்து சரிசெய்யப்பட்டது.

நீலகிரி மாவட்டத்தில், மழை பாதிப்புகளால் மண்சரிவு ஏற்படுகிறது. ஆகவே, சாலையின் ஓரங்களில் நிரந்தர தடுப்புச் சுவர் கட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் துவங்கப்படவுள்ளது. மண்சரிவு ஏற்படுவதற்காக நிரந்தர தீர்வு ஏற்படுத்த வேண்டும் என்று ஆலோசனை மேற்கொண்டதில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில், இந்திய தொழில்நுட்ப வல்லுநர்கள், ஐ.ஐ.டி. பேராசிரியர்கள், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், நெடுஞ்சாலைத்துறை, வனத்துறை, வருவாய்த் துறை அலுவலர்கள் உள்ளிட்ட 5 துறைச்சார்ந்த அலுவலர்கள் கொண்ட குழு அமைத்து, புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது, போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் சாலையை செப்பனிடுவது என முடிவு செய்யப்பட்டது. குழுவின் பரிந்துரையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று நிரந்தர தீர்வு ஏற்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மண்சரிவு ஏற்படாமல் இருக்கவும் ஏற்கனவே மண்சரிவு ஏற்பட்ட இடத்தை உறுதி செய்யவும் சுமார் ரூ.18 கோடியில் தாங்கு சுவர்கள் மற்றும் பாதுகாப்பு சுவர்கள் அமைக்கும் பணிக்கான கருத்துரு தயாரிக்கப்பட்டு வருகிறது என பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த நிகழ்வுகளில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள்த்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தேசிய நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் (சென்னை) திருமதி.கீதா, தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) சந்திரசேகர் (சென்னை), தலைமைப் பொறியாளர் (நபார்டு மற்றும் கிராம சாலைகள்) முருகேசன் (சென்னை), தேசிய நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்பு பொறியாளர் (சேலம்) திருமதி.வளர்மதி, கண்காணிப்புப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) ரமேஷ் (கோவை), தேசிய நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளர்கள் செல்வம் (கோபி), குழந்தைராஜ் (உதகை), தேசிய நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்டப் பொறியாளர் (உதகை) ராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தென்காசி – சங்கரன் கோவிலில்

புத்தகக் கண்காட்சி குறித்த ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் ஈ.இராஜா எம்.எல்.ஏ. தலைமை!

தென்காசி.டிச.18-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் அரசு சார்பில் சங்கரன்கோவில் கோமதி அம்பாள் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள்ள மைதானத்தில் வைத்து மாபெரும் புத்தகக் கண்காட்சி 22.12.2023 முதல் 02.01.2024 வரை 12 நாட்கள் நடைபெற உள்ளது.இது தொடர்பான ஆலோசனை கூட்டம் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு முழுவதும் புத்தகக் கண்காட்சி ஒவ்வொரு மாவட்டங்களிலும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதன் மூலம் மாணவ, மாணவியர்கள், இளைஞர்கள் லட்சக்கணக்கில் புத்தகக் கண்காட்சியை கண்டு களித்து பயன்பெற்றுள்ளனர்.

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் நகரில் முதன் முதலாக சங்கரன் கோவில் கோமதி அம்பாள் அரசு ஆண்கள் மேல் நிலைப் பள்ளியில் உள்ள மைதானத்தில் வைத்து புத்தகக் கண்காட்சி வருகிற 22.12.2023 முதல் 02.01.2024 வரை 12 நாட்கள் நடைபெறுகிறது.

இது தொடர்பாக புத்தகக் கண்காட்சியை சிறப்பாக நடத்துவது குறித்தும், புத்தகக் கண்காட்சி பேரணி, மற்றும் விழிப்புணர்வு நாடகங்கள், நிகழ்ச்சிகள் நடத்துவது தொடர்பான ஆலோசனைகள் வழங்கும் நிகழ்வு சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் வைத்து தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் சங்கரன்கோவில் வருவாய் கோட்டாட்சியர் சுப்புலட்சுமி, ஓய்வு பெற்ற மாவட்ட கல்வி அலுவலர் மாரியப்பன், நகர் வர்த்தக சங்கத் தலைவர் முத்தையா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

பின்னர் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. கூறியதாவது-

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு முழுவதும் புத்தக கண்காட்சி ஒவ்வொரு மாவட்டங் களிலும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.நம் சங்கரன்கோவில் முதன் முதலாக தமிழக அரசின் புத்தகத் திருவிழா சிறப்பாக நடத்திட அனைவரும் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.புத்தகத் திருவிழாவில் மாவட்டம் முழுவதிலும் இருந்து அனைவரும் பங்குபெரும் வகையில் நம் அனைவரின் பங்களிப்பு இருக்க வேண்டும்.இந்த புத்தக திருவிழா மூலம் மாணவ, மாணவியர்கள், இளைஞர்கள் பெரிதும் பயன்பெற வாய்ப்பு உள்ளது என்று அவர் கூறினார்.

நிகழ்வில் இலக்கிய அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், நகர் நல அமைப்புகள் ஆகியவற்றின் நிர்வாகிகள், வழக்கறிஞர்கள், நகைக் கடை மற்றும் ஹோட்டல் உரிமையாளர் சங்கத்தினர், தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள், மருத்துவர்கள், அரசியல் கட்சி பிரமுகர்கள், நிர்வாகிகள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளை சார்ந்தவர்கள் கலந்துகொண்டு ஆலோசனைகள் வழங்கினார்கள்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் வடக்கு தெற்கு ஒன்றிய கிளைக் கழக இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் (BLA-2) பூத் இளைஞரணி உறுப்பினர்கள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். உடன் சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், ஒன்றிய செயலாளர் சந்தானம், நகர்மன்ற தலைவர் ஜெ.சண்முகம், மாவட்ட துணைச் செயலாளர் மூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

தொடர் கனமழை எதிரொலி:

தூத்துக்குடிக்கு விரையும் பேரிடர் மீட்புக் குழு!

சென்னை, டிச. 18-

தென்இலங்கை கடற்கரை பகுதியை ஒட்டிய வங்கக்கடல் பகுதிகளில் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தின் தென் மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது.

குறிப்பாக நெல்லை, கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களில் இரவு தொடங்கிய கனமழை, தற்போது வரை நீடித்து வருகிறது. தொடர்ந்து பெய்துவரும் கனமழையால், சாலைகளில் மழைநீர் தேங்கி காணப்படுகிறது. இதனால் வாகன ஓட்டிகள் அவதியடைந்துள்ளனர்.

தொடர் மழையால் நெல்லை களக்காடு தலையணை பகுதியில் குளிக்கத் தடை விதிக்கப் பட்டுள்ளது. அகஸ்தியர் அருவி, சொரிமுத்து அய்யனார் கோவிலுக்கு செல்லவும் தடை விதிக்கப் பட்டுள்ளது. குற்றாலம் மெயின் அருவியில் தண்ணீர் வரத்து அதிகரிப்பால், குளிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேபோல பேச்சிப்பாறை அணையில் இருந்து வினாடிக்கு 1,000 கன அடி உபரி நீர் திறக்கப்படுகிறது. அத்துடன் திற்பரப்பு அருவியில் குளிக்கத்தடை விதிக்கப்பட்டுள்ளது/ கனமழை காரணமாக சுற்றுலாத்தலமான குமரியில் விவேகானந்தர் மண்டபம் மற்றும் திருவள்ளுவர் சிலைக்கு இயக்கப்படும் படகு போக்குவரத்து ரத்துசெய்யப்பட்டுள்ளது.

தொடர் மழை காரணமாக பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. இதன் காரணமாக அணையில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளதால் தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் ஆற்றின் கரையோரம் வசிப்பவர்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொடர் மழை பெய்துவருவதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நெல்லை, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 3 மாவட்டங்களுக்கு தேசிய பேரிடர் மீட்புப்படையினர் ஒரு குழுவுக்கு 25 பேர் என்ற அடிப்படையில் மொத்தம் 100 பேர் இந்த மாவட்டங்களுக்கு விரைந்துள்ளனர். தமிழ்நாடு அரசு பேரிடர் மேலாண்மை ஆணையம் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் முன்னெச்சரிக்கை பணிகளை தேசிய பேரிடர் மீட்புப்படையினர் மேற்கொள்வார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாமிரபரணி ஆற்றுக்கு

40 ஆயிரம் கன அடி நீர்வரத்து!

நெல்லை, டிச. 18-

தாமிரபரணி ஆற்றிற்கு 40 ஆயிரம் கன அடி நீர் வந்து கொண்டு இருப்பதால் அணையில் இருந்து 30,000 கன அடி நீரை திறக்க மாவட்ட நிர்வாகம் முடிவு செய்துள்ளது. தற்போது பாபநாசம் அணையில் இருந்து தாமிரபரணி ஆற்றில்டிக்கு 3,000 கன அடி நீர் திறக்கப்பட்டு வருகிறது.

இதனை பிற்பகல் 2 மணியளவில் 15,000 கன அடியாகவும், தொடர்ந்து 4 மணிக்கு மேல் 30,000 கன அடியாகவும் மாவட்ட நிர்வாகம் முடிவுசெய்து திறந்து விடப்பட்டுள்ளது.

தாமிரபரணி ஆற்றில் 30,000 கன அடி நீர் திறந்ததால் கரையோர பகுதிகளில் வசிப்பவர்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

மழையால் அணைக்கு வரும் நீரின் அளவு தொடர்ந்து அதிகரிக்கும் பட்சத்தில், தாமிரபரணி ஆற்றில் திறந்துவிடப்படும் நீரையும் அதிகரிக்கவாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கழக விவசாய அணித் தலைவர் - முன்னாள் அமைச்சர்

என்.கே.கே.பெரியசாமியின் சம்மந்தி ஏ.வி.சபாபதி கவுண்டர் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, டிச.18-

கழக விவசாய அணி தலைவரும், முன்னாள் அமைச்சருமான என்.கே.கே.பெரியசாமியின் சம்மந்தியும், ஒருங்கிணைந்த முன்னாள் ஈரோடு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான என்.கே.கே.பி. ராஜா, டாக்டர் என் .ஆர்.தங்கவேல் ஆகியோரின் மாமனாருமான ஏ.வி.சபாபதி கவுண்டர் அவர்கள் வயது மூப்பின் காரணமாக நேற்று முன்தினம் (16.12.2023, சனிக்கிழமை) அதிகாலை இயற்கை எய்தினார் என்கிற செய்தியினை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாருக்கு பரிமளா ராஜா, எஸ்.வேணி என்கிற இரு மகள்கள் உள்ளனர்.

அன்னாரின் மறைவு செய்தியறிந்த மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், அனைத்து கட்சி பிரமுகர்கள், கழக உடன்பிறப்புகள் பலர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். அன்னாரின் இறுதி சடங்கு நேற்று முன்தினம் (16.12.2023, சனிக்கிழமை) மாலை நடைபெற்றது.

காஞ்சிபுரம் மாநகராட்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 650 கழக நிர்வாகிகளுக்கு கை கடிகாரத்தை மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன் தலைமையில் மாவட்ட கழக செயலாளர்.க. சுந்தர் எம்எல்ஏ வழங்கினார். இதில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர்.க. செல்வம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன் காஞ்சிபுரம் மேயர். திருமதி மகாலட்சுமி யுவராஜ் மற்றும் பகுதி செயலாளர்கள் மாநகர நிர்வாகிகள் வட்ட செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.